அரசு பலவகை தொழில் நுட்பக் கல்லூரி, கெலமங்கலம் , கிருஷ்ணகிரி மாவட்டம் –635 113

**மேற்குறிப்பாணை எண்.ஓ.மு.1714/ஏ–1/2023 நாள்.27.04.2023**

பார்வை: சென்னை, தொழில் நுட்பக் கல்வி இயக்குநரின் கடித எண்.8557/பி4/2023, நாள். 21.04.2023.

– – –

பார்வையில் காணும் கடிதம் தகவலுக்காக அனுப்பப்படுகிறது.

ஒம்/– ஐ.செல்வகுமார்,
முதல்வரின் நேர்முக உதவியாளர்

பெறுநர்

அனைத்து ஆசிரியர்கள் ) பயிலக வாட்ஸ்ஆப் குழு மூலம்

நகல் அனைத்து துறைத்தலைவர்கள் ) தங்கள் துறையில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கு சுற்றுக்கு அனுப்பும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறது.

நகல் முதல்வரின் மேசைக்கு

நகல் துணை முதல்வர்

நகல் முதல்வரின் நேர்முக உதவியாளர் / பொருளாளர்

நகல் கண்காணிப்பாளர் ( நிர்வாகம் ) / கணக்குகள்

நகல் இருப்பு கோப்பு

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

28.4.23

கண்காணிப்பாளர்

27/4/23

தொழில் நுட்பக் கல்வித் துறை

| அனுப்புநர் | பெறுநர் |
|---|---|
| தொழில் நுட்பக் கல்வி இயக்குநர்,<br>தொழில் நுட்பக் கல்வி இயக்ககம்,<br>கிண்டி, சென்னை –25. | முதல்வர் / முதல்வர்(பொறுப்பு),<br>அனைத்து அரசினர் பாலிடெக்னிக்<br>கல்லூரிகள் மற்றும் சிறப்பு பயிலகங்கள். |

கடித எண். 8557/பி4/2023, நாள். 21.04.2023

ஐயா/அம்மையீர்,

பொருள்: தொழில் நுட்பக் கல்வி இயக்ககம் – நிர்வாகம் – அரசினர் பாலிடெக்னிக் கல்லூரிகள் மற்றும் சிறப்பு பயிலகங்கள் – ஆசிரியப் பணியாளர்கள் பகுதிநேர M.E / M.Phil/ Ph.D பயில அனுமதி கோருவது – கருத்துரு அனுப்புவது – தொடர்பாக.

......

இத்துறையின் கீழ் இயங்கும் அரசினர் பாலிடெக்னிக் கல்லூரிகள் மற்றும் சிறப்பு பயிலகங்களில் புதியதாக பணியில் சேர்ந்த / பணிபுரியும் ஆசிரியர்கள் பகுதிநேர உயர்கல்வி பயில (M.E / M.Phil/ Ph.D) அனுமதி கோரி பல்வேறு பயிலகங்களிலிருந்து விண்ணப்பங்கள் பெறப்பட்டுள்ளன.

மேற்காணும் பொருள் தொடர்பாக, பயிலகங்களிலிருந்து அனுமதி கோரி கருத்துரு அனுப்பப்படும் பொழுது கீழ்க்கண்ட ஆவணங்களை பெற்று முதல்வரால் நன்கு கூர்ந்தாய்வு செய்து முதல்வரின் பரிந்துரையுடன் அனுப்புமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

1. சம்மந்தப்பட்ட ஆசிரியரின் நிபந்தனைகளுடன் கூடிய உறுதி மொழிப் படிவம்.
2. உயர்கல்வி பயில இருக்கும் தலைப்பு (துறைக்கு தொடர்புடையதா).
3. உயர்கல்வி பயில இருக்கும் வழிகாட்டியின் விவரம் மற்றும் அவரின் ஒப்புதல் கடிதம் .
4. ஆராய்ச்சி படிப்பு மேற்கொள்ளப்படும் கல்வி ஆண்டு மற்றும் பல்கலைக்கழக விவரம்.

நிர்வாக காலத்தாமத்தினை தவிர்க்கும்பொருட்டு, மேற்காணும் ஆவணங்களை முதல்வர் நிலையில் நன்கு பரிசீலித்து, விண்ணப்பத்துடன் ஆவணங்களையும் இணைத்து. முழுமையான கருத்துருவினை அனுப்புமாறு அனைத்து பயிலக முதல்வர்கள் / முதல்வர் (பொறுப்பாளர்களுக்கு) தெரிவித்துக்கொள்ளப்படுகிறார்கள்.

24/4/2023

தொழில் நுட்பக் கல்வி இயக்குநருக்காக

24/4/23